8th November 1966]

லேபிள்களை வாங்கி ஒட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, தேவை யான அளவுக்கு அந்த மனு லேபிள்களை வினியோகிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : திரு. மணி அவர்கள் கேட்ட கேள்விக்குத் தனிக் கேள்வி வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்ன குறை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஸ்டாம்ப் வாங்கி ஒட்ட வேண்டிய நெருக்கடிக்கு பொது மக்கள் ஆளாகிறார்கள். இந்த நிலைமையைப் போக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த நிலைமையைப்பற்றி பரிசீலனை செய்யும்போது போதுமான அளவுக்கு ஸ்டாம்புகள், பத்திரங்கள் இல்லாமல் இருந்தது. இந்திய அரசாங்கத்திடம் நம்முடைய தேவையை வற்புறுத்தி எடுத்துச் சொல்லியதன் பேரில் தற்போது போதுமான அளவுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பது என்னிடத்தில் இருக்கக்கூடிய விவரம்.

திரு. செ. மாதவன் : ஸ்டாம்ப் வெண்டர்கள் விற்கும்போது கோர்ட் இருக்கும் இடங்களில் ஒரு நாள்தான் இன்டென்ட் இருக் கிறது. அந்த ஒரு நாள் தவிர அந்த வாரத்தில் வேறு சப்ளை கிடையாது. அதனால் கோர்ட் நடவடிக்கைகளுக்குப் பங்கம் ஏற்படுகிறது. தேவையான அளவு டிரஷரியில் இல்லை. இதிலே காலதாமதம் இல்லாமல் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இதுபோன்ற குறைகள் என்னு டைய கவனத்திற்கு வரவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

திரு. எம். எஸ். மணி : இந்த ஸ்டாம்ப் ஒன்றில்தான் கள்ள மார்க்கெட் இல்லாமல் இருந்தது. நான்கணா ஸ்டாம்ப் ஒரு ரூபாய் கொடுத்தால்தான் கிடைக்கிறது. இந்த நிலையைப் போக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : சில இடங்களில் இதற்குப் பற்றாக் குறை இருந்தது. அதை நிவர்த்தி செய்ய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

*** 515 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெரம்பலூர் வட்டத்திலுள்ள கஜானாவில் சென்ற ஜூலை மாதம் 26-ந் தேதி கோர்ட்டு ஸ்டாம்பும், பத்திரங்களும் கிடைக் காமல் பொது மக்கள் பக்கத்து ஊர்களில் அதிக விலை கொடுத்து வாங்கியது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

[8th November 1966

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There was scarcity of stamps under a few denominations on 26th July 1966 in the Sub-Treasury at Perambalur.

(*b*) The shortage was due to non-receipt of the indented supplies from the Nasik Press. In view of the general shortage of stamps and stamp papers in the State, the matter was taken up with the Government of India who have been requested to take suitable measures to make adequate supply of stamp paper. There is adequate stock at present to meet the public demand.

திரு. செ. மாதவன் : *ஸ்டாம்ப் வெண்டர் மூலமாக இல்லாமல் சர்க்காரே நேரடியாக விநியோகிக்கலாம் என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டதா? அப்படியானால் எந்த நிலைமையில் அப்பரிசீலனை இருக்கிறது ?*

கனம் திரு. வெ. ராமைய்யா : *தனிக் கேள்வி வேண்டும்.*

திரு. து. ப. அழகமுத்து : *சென்ற தடவை கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தபோது கூட, இந்தப் பத்திரங்கள் குறைவாக இருப்பதால் நாசிக்குக்கு எழுதியிருக்கிறோம், நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இன்னும் இவை பற்றாக் குறையாக இருப்பதால் மக்கள் மற்ற மாவட்டங்களுக்குச் சென்று வாங்க வேண்டிய கஷ்டத்தில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பற்றாக்குறையைப் போக்க அவசரமாக, உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?*

கனம் திரு. வெ. ராமைய்யா : *அவசர உடனடி நடவடிக்கையை அரசாங்கம் எடுத்தது. இதைப்பற்றி மத்திய அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து நடத்தியதில் நமக்கு ஓரளவு அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் குறைபாடுகள் இருந்தால் அவை கவனிக்கப்பட்டு தீர்க்கப்படும்.*

தண்ணீர் தண்டத் தீர்வை

** 516 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

தாம்பர பரணி, மணிமுத்தாறு நீரத்தில் தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டிருக்கும் புன்செய் ஒரு போகம் நிலங்களின் விவரம் என்ன ? (தாலூகா வாரியாக)

THE HON. SRI V. RAMAIAH : A statement[a] showing the extent of lands (single crop wet and dry) subject to penal water cess in Tambraparani and Manimuthar systems in Tirunelveli district, is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : *அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரத்தில் இருந்து திருநெல்வேலி ஜில்லாவில் தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டிருக்கும் நிலம் 25,000 ஏக்கர்*

---

[a] Printed as Appendix II on pages 716–717.